**Annexure-I**

புதுச்சேரி அரசு

# செய்தி மற்றும் விளம்பரத்துறை

18, பெல்காம் வீதி, புதுச்சேரி - 1.

## ஒப்பந்தப் புள்ளி

எண். 737/செ.வி.து./உ.இ.(வி)/2020/ புதுச்சேரி, 25.03.2020

இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரத்துறை , புதுச்சேரி அவர்கள் , புதுச்சேரி அரசு நடத்தும் தலைவர்களின் பிறந்தநாள் மற்றும் நினைவுநாள் விழாவின்போது தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதற்காக, கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரிசை எண்கள் ஒவ்வொன்று க்கும் ஒப்பந்தப் புள்ளிகள் தனித்தனியான உறையில் மூடி முத்திரை இடப்பட்டதாக, கீழே விவரித்துள்ளபடி, சூலை 2020 முதல் சூன் 2022 வரையிலான காலத்திற்கு, பொருட்கள் சப்ளை மற்றும் பல்வகை வேலைகளை செயல்படுத்துவதற்காக வரவேற்கப்படுகிறது . ஒப்பந்தப் புள்ளிகள் இவ்வலுவலகத்தில் 16.04.2020அன்று மாலை 3.00 மணி வரை தகுதியானவர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது

| ஒப்பந்தப் புள்ளிகளின் வரிசை எண்கள் | பொருட்கள் சப்ளை மற்றும் பல்வகை வேலைகள் பற்றிய விபரம் | ஒப்பந்தப்புள்ளிகள் கோர விரும்புபவர் களின் தகுதி | பிணை வைப்புத் தொகை (E.M.D.) | ஒப்பந்தப்புள்ளிகள் பிரிக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |
| A. **தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்தல் :** | | | | |
| 1. | தற்காலிகமான ஏணிப்படிகள் அமைத்தல் (Temporary Ladder ): மரத்திலான தற்காலிக ஏணிப்படியானது மாமரப் பலகையால் புதுச்சேரியில் உள்ள சிலைகளின் உயரத்திற்கேற்ப (குறைந்தது 25) படிகள் கொண்டதாகவும், ஒவ்வொரு படியும் 100X35 செ.மீ. நீளம் மற்றும் அகலமும், இருபுறமும் கைப்பிடி கொண்டதாகவும் இருக்க வேண்டும். மாலை அணிவிக்க ஏதுவாக மேடை பெரியதாக இருக்க வேண்டும் . ஏணிப்படி முழுவதும் சாரங்கள் தெரியாதவாறு வெள்ளைத் து ணியினால் மூடியும், வண்ண ஜிகினா பூவினால் அலங்கரிக்கப்பட்டும், ஏணிப்படிக்கட்டுகள் மொத்தமான சிவப்பு நிற கம்பளம் / துணியால் மூடப்பட்டும் இருக்க வேண்டும் | இந்த வேலையில் முன்அனுபவம் இருப்பின் அவர்களின் ஒப்பந்தப் புள்ளிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும். | ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) + GST @ 18% | 16.04.2020ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு |
| 2. | **அ**. நிரந்தர ஏணிப்படிகள் (Permanent Ladder) உள்ள இடங்களில் ஏணிப்படி முழுவதும் வெள்ளைத் துணியினால் மூடியும் , வண்ண ஜிகினா பூவினால் அலங்கரிக்கப்பட்டும், ஏணிப்படிக்கட்டுகள் மொத்தமான சிவப்பு நிற கம்பளத்தால் மூடப்பட்டும் இருக்க வேண்டும்.<br>**ஆ**. 10 நபர்கள் மட்டும் அமர்ந்து பாடக்கூடிய வகையில் இரண்டு அடி உயரத்தில் (i) 12’ X 12’ வடிவமைப்பு மற்றும் (ii) 12’ X 8’ வடிவமைப்பில் மேடை மற்றும் அதற்குண்டான படி அமைத்து சிகப்பு நிற கம்பளத்தால் மூடியிருக்க வேண்டும்<br>**இ**. சிலையின் பீடத்தின் கீழ் 3’ X 7’ அளவுள்ள பேனர் பொருத்துவதற்கு ஏதுவாக இரும்பினால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட 7’ X 7’ அளவுள்ள பேனர் ஸ்டேன்ட் (போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் உட்பட்டு இருக்க வேண்டும்) | மேலே கூறியது போல் | ரூ.5000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) + GST @ 18% | 16.04.2020ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 3. | **கீழ்க்கண்ட பூமாலைகள் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்தல் (Garlands):** | | | |
| | அ. மலர் மாலை பெரியது (6 அடி நீளம்) (ஒன்றுக்கு)<br>ஆ. ரோஜா மாலை சிறியது (2 அடி நீளம்) (ஒன்றுக்கு)<br>இ. உதிரிப்பூக்கள் (2 கிலோ) (ஒன்றுக்கு)<br>ஈ. மலர் வளையம் (ஒன்றுக்கு) | மேலே கூறியது போல் | ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) + GST @ 18% | 16.04.2020ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு |
| 4. | (i) புதுச்சேரியில் உள்ள 28 சிலைகள், பீடங்கள் மற்றும் மேல் கூரையை சரிபார்த்து அதே நிறத்தில் நல்ல தரம் மிக்க வண்ணம் தீட்டுதல் மற்றும் (ii) சிலையை சுத்தம் செய்தல் (iii) இந்த வேலைக்கு ஆட்கூலி , போக்குவரத்து, பொருட்செலவு, சாரம் மற்றும் இதர செலவுகள் உட்பட்டு இருக்க வேண்டும் | மேலே கூறியது போல் | ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) + GST @ 18% | 16.04.2020ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு |
| **B. தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்தல், சுதந்திர தின விழா மற்றும் குடியரசு தின விழா** | | | | |
| 5. | கீழ்க்கண்ட பொருட்கள் வாடகைக்கு கொடுக்க (Hiring of Shamiana, Chairs etc.,)<br>(i) குழாய் (Pipe) ஷாமியானா (ஒரு சதுர அடிக்கு);<br>(ii) நீர் புகா ஷாமியானா (Waterproof Shamiana) (ஒரு சதுர அடிக்கு);<br>(iii) சாதாரணமான (Ordinary) ஷாமியானா (ஒரு சதுர அடிக்கு);<br>(iv) 8 அடி சிறப்பு பக்கசுவர் (Special Side Wall) முகப்பு (ஒன்றுக்கு);<br>(v) 6 அடி பக்கசுவர் (Ordinary Side Wall) முகப்பு (ஒன்றுக்கு)<br>(vi) பிளாஸ்டிக் P.V.C., நாற்காலி (ஒன்றுக்கு) (5000 நாற்காலிகளுக்கு மேல் கொடுக்க தகுதி உடையவர்கள் மட்டும்);<br>(vii) VIP குஷன் நாற்காலி (VIP Cushion Chairs) (ஒன்றுக்கு) (200 நாற்காலிகளுக்கு மேல் கொடுக்க தகுதி உடையவர்கள் மட்டும்);<br>(viii) VIP ராஜா நாற்காலி (VIP Raja Chair); 1 No.<br>(ix) சிவப்பு மிதியடி விரிப்பு (Red Coir Mat ) (ஒரு சதுர அடிக்கு);<br>(x) சிவப்பு சிந்தெடிக் மதிய டி விரிப்பு (Red Synthetic Carpet) (ஒரு சதுர அடிக்கு);<br>(xi) கண்ணாடி போடியம் (Glass Podium ) (ஒன்றுக்கு);<br>(xii) மரத்தாலான போடியம் (Wooden Podium ) (ஒன்றுக்கு);<br>(xiii) சமுக்காளம் (9'X16') (Bed Sheet); 1 No.<br>(xiv) சமுக்காளம் (8'X12') (Bed Sheet); 1 No.<br>(xv) சமுக்காளம் (15'X20') (Bed Sheet); 1 No.<br>(xvi) ஸ்டைன்லெஸ் ஸ்டீல் மேஜை **6' X 1½'** (Stainless Steel Table); - 1 No. | மேலே கூறியது போல் | ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) + GST @ 18% | 16.04.2020ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | (xvii) டீபாய் வெள்ளைத்துணி மற்றும் அலங்கார சாட்டின் துணி முகப்பு உட்பட 6’ X 1½’ (Teapoy with white cloth and frill cloth covering ) (ஒன்றுக்கு);<br>(xviii) ஸ்டைன்லெஸ் பிளேட் 1½’ X 1’ (Stainless Steel Plate); - 1 No.<br>(xix) வரவேற்பு மேஜை துணி முகப்புடன் (Reception Table with cloth covering) (ஒன்றுக்கு)<br>(மேலே குறிப்பிட்ட பொருட்கள் புதியதாகவும், குறிப்பிடும் தொகையானது உரிய முறையில் அமைத்தல், பின்பு பிரித்தல் / எடுத்தல் மற்றும் ஆட்கூலி, போக்குவரத்து உட்பட்டு இருத்தல் வேண்டும்). | | | |

அ) ஒப்பந்தப் புள்ளிகள் கோர விரும்புபவர்கள் கீழ்கண்டவற்றை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.:-

(i) பிணைவைப்புத் தொகையினை (E.M.D.) இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரத்துறை , புதுச்சேரி என்ற பெயருக்கு வரைவோலையாக (Demand Draft) எடுக்க வேண்டும். வரைவோலை இல்லாத ஒப்பந்த புள்ளிகள் நிராகரிக்கப்படும்;

(ii) சம்பந்தப்பட்ட நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்திடம் பெறப்பட்ட நடைமுறையில் உள்ள வர்த்தக சான்றிதழ்;

(iii) சரக்கு மற்றும் சேவை வரி (GST)-ல் பதியப்பெற்ற சான்றிதழ்;

(iv) அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிடம் பெறப்பட்ட சம்பந்தப்பட்ட பணியில் குறைந்தது மூன்று வருட முன்அனுபவச் சான்று;

(v) பட்டய கணக்காளரிடம் பெறப்பட்ட மூன்று வருட தணிக்கை சான்றிதழ்.

ஆ) பூமாலை சப்ளை செய்வது மற்றும் சிலைகளுக்கு வண்ணம் தீட்டுதல் தவிர மற்றவைகள் வாடகைக்காக மட்டுமே . ஒப்பந்த புள்ளிகள் சேவை வரி உட்பட இருத்தல் வேண்டும்;

இ) விழா முடிந்தவுடன் அவரவர் சொந்த செலவில் வாடகைப்பொருட்களை திருப்பி எடுத்துச் செல்ல வேண்டும். விழாவின் போது வாடகைப் பொருட்கள் காணாமல் போனாலோ அல்லது உடைந்தாலோ அதற்கு இத்துறை பொறுப்பல்ல. நஷ்ட ஈடும் வழங்கப்பட மாட்டாது;

ஈ) சிலைகளின் விவரம் மற்றும் இதர விவரங்கள் அலுவலக நேரத்தில் மேற்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

உ) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் <u>16.04.2020ஆம்</u> தேதி மாலை 03.00 மணிக்குள் இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரத்துறை, 18, பெல்காம் வீதி, புதுச்சேரி - 605001 என்ற முகவரிக்கு வந்து சேர வேண்டும்;

ஊ) ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையி ல் அன்றே மாலை 4.00 மணிக்கு பிரிக்கப்படும். காலதாமதமாக வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது;

எ) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் உறையின் மீது **“ஒப்பந்தப்புள்ளியின் வரிசை எண் மற்றும் ஒப்பந்தப்புள்ளி / வேலையின் விவரம்”** அவசியம் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும் . எந்த ஒரு நிலையிலும் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ, நிராகரிக்கவோ இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

இயக்குநர்